1981 பிப்ரவரி 4]

அதனால் அரசுக்கும் மாநகராட்சிக்கும் ஏற்படும் பணச் செலவும் குறையும். ஆகவே உடனடியாக அந்தப் பணி மேற்கொள்ளப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : விரைவில் பணி தொடர்வது பற்றி அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

குளுகோஸ் தொழிற்சாலைகள்.

* வினா எண். 178—திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சின்னசேலம் பகுதியில் குளுக்கோஸ் தொழிற்சாலை ஆரம்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

* வினா எண். 179—திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டத்தில் ''குளுக் கோஸ்'' தொழிற்சாலை நிறுவும் உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. சி. பழனிமுத்து : இந்த குளுக்கோஸ் தொழிற் சாலையை ஆத்தூரில் ஏற்படுத்த வேண்டுமென்று சேலம் மாவட்ட ஆட்சித் தலைவரும், தொழில் மைய இயக்குநரும் சிபாரிசு செய்து அனுப்பியுள்ளார்கள் என்று கேள்விப்படுகிறேன். அவர்கள் இடங்களைக் கூடப் பார்த்து கல்பனூரில் ஐந்து ஏக்கர்

புறம்போக்கு நிலம் இருக்கிறது என்றும் அங்கே அந்தத் தொழிற்சாலையை அமைக்கலாம் என்றும் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் சிபார்சு செய்து அனுப்பியுள்ளார் என்பதும் அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்திலே பெருமளவில் விளைகின்ற மரவள்ளிக் கிழங்கைப் பயன்படுத்துகின்ற விதத்திலே தமிழ்நாட்டிலே குளுக்கோஸ் தொழிற்சாலை, அதாவது குளுக்கோஸ் காம்ப்ளெக்ஸ் நிலையம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை 'டிட்கோ' தீவிரமாக பரிசீலித்து வருகிறது. சேலம் மாவட்டத்திலே எந்தத் தாலுக்காவிலே துவங்குவது என்பது, இந்த ஆய்வு முடிந்ததற்குப் பின்னாலே முடிவு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு அச்சுத்துறை ஊழியர்களுக்கு மருத்துவ விடுப்பு

வினா எண். 180—திரு. செ. செம்மலை : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு அரசின் மற்றத்துறை ஊழியர்களுக்கு அவர்களுடைய பணிக்காலம் முழுமைக்குமாக 18 மாதங்கள் மருத்துவ விடுப்பு அனுமதிக்கப்பட்டு இருக்கும்போது அரசினர் எழுதுபொருள், அச்சுத்துறையின் நுட்பப் பணியாளர்களுக்கு மட்டும் (Technical Employees) 12 மாதம் அனுமதிக்கப்பட்டிருப்பதின் காரணம் என்ன ?

(ஆ) அவர்களுக்கும் 18 மாதங்கள் அனுமதிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :—

(அ) மற்றும் (ஆ) எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறைத் தொழில் நுட்பப் பணியாளர்களுக்கென விதிக்கப்பட்டுள்ள விடுமுறை விதிகளின்படி, அவர்களுக்கு 12 மாதங்களே மருத்துவ விடுப்பு உண்டு. எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை, தொழில் வகையைச் சார்ந்ததா அல்லது அரசுத் துறைவகையைச் சார்ந்ததா என்னும் பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளதால், தொழில் நுட்பப் பணியாளர்களுக்கு 18 மாதங்கள் மருத்துவ விடுப்பு வழங்க வேண்டும் என்னும் கோரிக்கையை மேற்குறித்த கேள்வியின்மீது ஏற்படும் முடிவுக்குப் பின்னரே பரிசீலிக்க இயலும்.